பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூபா
5-00

சுடர்10 திருவள்ளுவர் ஆண்டு2026 ஆடி 04 வியாழக்கிழமை (20-07-1995) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்237

# வட பகுதிக்கு ஆயுதம், துருப்புக்கள் கொண்டு வருவதில் பெரும் பாதிப்பு!

## 'எடித்தரா' தகர்ப்பின் விளைவு

கொழும்பு, ஜூலை 20

விடுதலைப் புலிகளினால் "எடித்தரா" கட்டளைக் கப்பல் தகர்க்கப்பட்டதை அடுத்து வட பகுதிக்கு துருப்புக்களையும், ஆயுதங்களையும் கொண்டு வருவது பெருமளவில் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

"எடித்தரா" வுக்கு பதிலாக புதிய கப்பல்களைத் தேடி அலையும் இக்கட்டான நிலை அரசுக்கு ஏற்பட்டிருப்பதாக கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

படையினர் மேற்கொண்ட "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையின்போது படையினருக்கு அதிகளவு விநியோகத்துக்கு இக்கப்பலே உதவியது.

கடற்படையிடம் உள்ள சீனத் தயாரிப்பு தரையிறங்கு கலங்கள் இரண்டு, சிங்கப்பூர் தயாரிப்பு தரையிறங்கு கலம் ஒன்று, உள்ளூரில் தயாரிக்கப்பட்ட தரையிறங்கு கலங்கள்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## காங்கேசனுக்கு நேற்று கடற்படைக் கப்பல்கள்

காங்கேசன்துறை துறைமுகத்துக்கு நேற்றுக் காலை 8.30 மணியளவில் பாரிய கப்பல் ஒன்றும் இரு தரையிறங்கு கப்பல்களும், அவற்றுடன் ஆறுக்கும் மேற்பட்ட டோறா படகுகளும் வந்து சேர்ந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தக் கப்பல்கள் அணியில் வீரயா கப்பலும் அடங்கி இருந்ததாகவும் கூறப்படுகிறது.

இக்கப்பல் அணி சென்ற சிறிது நேரத்தில் இரு ஹெலிகளும் ஆழ்கடலுக்கு மேலாக பறந்து காங்கேசன்துறை பக்கமாகச் சென்றதையும் அவதானிக்கக் கூடியதாக இருந்தது. [ஓ-173]

## புலிகளின் அபாயகரமான தரைக் கண்ணிவெடிகள்

### படையினருக்கு பெரும் சவால்

கொழும்பு, ஜூலை 20

பிரதான யுத்த டாங்கிகளையும், துருப்புகளை ஏற்றிச் செல்லும் கவச வாகனங்களையும் நாசமாக்கக் கூடிய புலிகளின் அபாயகரமான தரைக்கண்ணிவெடிகளை "முன்னேறிப் பாய்தல்" நடவடிக்கையில் ஈடுபட்ட படையினர் எதிர்கொள்ள வேண்டிவந்ததாகவும்—

இதனால் இராணுவத்தின் கவசப்படையணி பெரும் சேதங்களை ஏற்படுத்தக் கூடிய புதிய ஆபத்து ஒன்றை எதிர்நோக்க வேண்டிய இக்கட்டு நிலை ஏற்பட்டிருப்பதாகவும் —

கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

கவச வாகனங்களுக்கு எதிராக அறிமுகப்படுத்தப்பட்ட — ஆகக்கூடிய சக்தி வாய்ந்த — கண்ணிவெடிகள் இவைதான் என இராணுவ வல்லு

(6 ஆம் பக்கம் பார்க்க)

## ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சை திட்டமிட்டபடி நடக்கும்

கொழும்பு, ஜூலை 20

ஜி. சீ. ஈ. உயர்தரப் பரீட்சை திட்டமிட்டபடி இம்மாதம் 31 ஆம் திகதி ஆரம்பமாக உள்ளதாக கல்வி அமைச்சின் உயர் அதிகாரி ஒருவர் அறிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டைத் தவிர்ந்த ஏனைய பரீட்சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டைகளும், நேர அட்டவணைகளும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும்—

யாழ். குடாநாட்டு மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் இவ்வார இறுதிக்குள் அனுப்பி வைக்கப்படும் என்றும்— அவர் தெரிவித்தார்.

இதேவேளை—

அண்மைய இராணுவ நட

(5 ஆம் பக்கம் பார்க்க)

## நாடாளுமன்ற அமர்வை ஈ.பி.டி.பி. பகிஷ்கரிப்பு

### 5 அம்ச கோரிக்கை முன்வைப்பு

கொழும்பு, ஜூலை 20

5 அம்சக் கோரிக்கையை வலியுறுத்தும்முகமாக தமது கட்சி எம். பிக்கள் 9 பேரும் நேற்று முன்தினத்திலிருந்து நாடாளுமன்றத்தைப் பகிஷ்கரித்து வருகின்றனர் என்று ஈ. பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ். குடாநாட்டில் அனைத்துப் பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உணவு, மற்றும் மருந்து வகைகளை வழங்க வேண்டும், குண்டு வீச்சை முடிவுக்குக் கொண்டு வர வேண்டும், அண்மையில் நடந்த சம்பவங்கள் குறித்து விசாரிக்க கமிஷன் நியமிக்க வேண்டும் என்று ஈ. பி. டி. பி. கோரி உள்ளது.

(இ-4)

## அடுத்த தாக்குதல் யாழ். நகர் மீதாம் படையினர் தயாராவதாகச் செய்தி

கொழும்பு, ஜூலை 20

"முன்னேறிப் பாய்தல்" இராணுவ நடவடிக்கையின் இரண்டாம் கட்டத் தாக்குதலை யாழ். நகரின் மீது நடத்துவதற்கு ஸ்ரீலங்கா பாதுகாப்புப் படையினர் தயாராகி வருகின்றனராம்.

கொழும்புத் தகவல்களை மேற்கோள்காட்டி பி. பி. ஸி யின் "சந்தேசய" சிங்களச் சேவை இச்செய்தியை வெளியிட்டது.

ஸ்ரீலங்கா இராணுவத்தின் விசேட அதிரடி படையணியினை ஈடுபடுத்தி திடீர் தாக்குதலை மேற்கொள்ளும்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## சண்டிலிப்பாயில் பொலீஸ் நிலையம் நிறுவ வந்த 15 பொலீஸாரும் எங்கே?

### புலிப்பாய்ச்சலின்போது காணாமற்போய் விட்டனராம்

கொழும்பு. ஜூலை 20

விடுதலைப் புலிகள் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை சண்டிலிப்பாய்—அளவெட்டிப் பகுதிகளில் மேற்கொண்ட "புலிப் பாய்ச்சல்" நடவடிக்கையின்போது 15 ஸ்ரீலங்கா பொலீஸாரும் காணாமற் போய்விட்டனராம்.

சிவில் நிர்வாகத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் சண்டிலிப்பாயில் பொலீஸ் நிலையம் ஒன்றைத் திறப்பதற்காக இந்த 15 பொலீஸாரும் சண்டிலிப்பாய்க்கு அனுப்பப்பட்டிருந்தனர்.

பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஒருவர் தலைமையிலான இந்த பொலீஸ் கோஷ்டி "புலிப் பாய்ச்சல்" நடவடிக்கைக்கு

(5 ஆம் பக்கம் பார்க்க)

## இறக்க முன் மனைவிக்கு 'புக்காரா' விமானி கூறியது

கொழும்பு, ஜூலை 20

விடுதலைப் புலிகளால் கடந்த சனிக்கிழமை சுட்டு வீழ்த்தப்பட்ட "புக்காரா" விமானத்தின் விமானி பிளைட் லெப்டினன்ட் தில்ஹான் பெரேரா தனது மனைவியான இனோக்கா அத்தநாயக்காவுடன் பலாலியிலிருந்து விமானம் சுட்டு வீழ்த்தப்படுவதற்கு சிறிது முன்பாக தொலைபேசியில் உரையாடினாராம்.

"நீ எதற்கும் பயப்படாதே... எங்கள் முன்னேறிப் பாய்தல் நடவடிக்கை வெற்றிப் பாதையில் செல்கிறது. சுமார் இரு கிழமைக்குப் பின்னர் நான் பலாலிக்கு வர வேண்டிய தேவையே இராது" என அப்போது அவர் தொலைபேசியில் கூறினாராம்.

ஏழு மாதங்களுக்கு முன்னர்தான் தில்ஹான் பெரேரா, இனோக்காவைத் திருமணம் செய்திருந்தார்.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அளவெட்டியில் நேற்றும் ஷெல் வீச்சு

அளவெட்டி, ஜூலை 20

நேற்றுக் காலை 10-30 மணி அளவில் அளவெட்டியில் மக்கள் குடியிருப்புகளை [illegible] தாக்குதல் நடத்தினர்.

இதனால் இராணுவத்திடமிருந்து விடுவிக்கப்பட்ட அளவெட்டி தெற்கு, கேணிவத்தை, வெள்ளியம்பத்தை, தம்மலை, பத்துப்பனையடி, மாகியப்பிட்டிப் பகுதிகளில் தமது வீடுகளில் இருந்து பொருள்களை அப்புறப்படுத்திய மக்கள் பீதி அடைந்தனர்.

மாட்டுவண்டிகள், லான்மாஸ்டர்கள், சைக்கிள்களில்

[5ஆம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மானிப்பாய் பரிஷ் ப.நோ.கூ.சங்கம்

### அறிவித்தல்

எமது சங்கத்தின் சுதுமலை, நவாலி, ஆனைக்கோட்டை, மானிப்பாய் ஆகிய கிராமங்களிலுள்ள கிளைகள் யாவும் வழமையான இடத்தில் இயங்குகின்றன என்பதை பாவனையாளர் யாவர்க்கும் அறியத் தருகின்றோம். இணுவில் பரராசசேகரப்பிள்ளையார் கோவிலடியில் தற்காலிகமாக இயங்கும் காரியாலயம் 21-7-95 முதல் மானிப்பாய் தலைமையகத்தில் இயங்கும். கிராமியவங்கியும் தலைமைக்காரியாலயத்தில் இயங்கும் என்பதையும் அறியத் தருகின்றோம். பணியாளர்கள் யாவரும் தற்காலிக காரியாலயத்திற்கு வருகை தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். சங்க இயக்குநர்கள் யாவரும் 21-7-95 காலை மானிப்பாய் தலைமையகத்திற்கு வருமாறு தலைவர் அவர்கள் கேட்டுள்ளார்.

பொதுமுகாமையாளர்

(சி-1912)

ஊரெழு

## பர்வதவர்த்தினி அம்பாள் ஆலயம்

### வருடாந்த மஹோற்சபம்

கொடியேற்றம் — இன்று 20-07-95 வியாழன் காலை 10·00 மணி

இரதோற்சபம் — 30-07-95 ஞாயிறு காலை 10-00 மணி

தீர்த்தோற்சபம் — 31-07-95 திங்கள் காலை 10-00 மணி

பூங்காவனம் — 0 -08-95

மஹோற்சப குரு:
பிரம்மஸ்ரீ சோ. வாகீஸ்வரக் குருக்கள்

— பரிபாலனசபை

(37627)

உ

## ஸ்ரீசாயி துர்க்காதேவி ஆலயம்

கொக்குவில்

### கணக்குப் பரிசோதனை

மேற்படி ஆலயத்தின் 1994/95 நிதி வருடத்திற்குரிய [ஆகஸ்ட் 94 — ஜூலை 95] வரவுசெலவு அறிக்கையை பரிசோதனை செய்வதற்கு கணக்குப் பரிசோதிக்கும் நிறுவனங்களிடமிருந்து கேள்வி கோரப்படுகின்றது. விண்ணப்பங்கள் 30-07-1995 வரை ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு ஆலயப் பொருளாளருடன் ஆலய அலுவலகத்தில் தொடர்பு கொள்ளவும்.

செயலாளர்

(37624)

## நாவலர் கல்வி நிலையம்

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

இன்றிலிருந்து (20—07—95) வழமையான நேர அட்டவணைப்படி சகல வகுப்புகளும் நடைபெறும்.

-நிர்வாகி

(37622)

### முக்கிய அறிவித்தல்

றோஸ் இனிப்புத் தொழிற்சாலை, மானிப்பாயில் பணியாற்றும் சகல நிரந்தர, தற்காலிக பணியாளர்களும் 21-07-1995 வெள்ளிக்கிழமை காலை 9-00 மணிக்கு தொழிற்சாலையில் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

நிர்வாகம்

றோஸ் இனிப்புத் தொழிற்சாலை
மானிப்பாய்.

(சி-1914)

### அறிவித்தல்

மகாஜனக் கல்லூரி ஆசிரியர்கள், லிகிதர்கள், சிற்றூழியர்கள் நாளை 21-07-95 காலை 10 30மணிக்கு கல்லூரிக்கு வருகை தரவும்.

க. நாகராசா
அதிபர்.

[சி/1913]

# ஹங்கேரியில் இறந்த 18 பேரின் சடலங்கள் கொழும்புக்கு வரும்

புடாபெஸ்ற், ஜூலை 20

ஹங்கேரிச் சம்பவத்தில் உயிரிழந்த இலங்கையர்களில் 18 பேரின் சடலங்களை கொழும்புக்கு எடுத்துவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இலங்கை - ஹங்கேரி அரச அதிகாரிகள் இது குறித்து ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர்.

இதற்கிடையில் —

ஹங்கேரிச் சம்பவத்தில் உயிர் பிழைத்த இலங்கையர்கள், ஹங்கேரிய அரசிடம் அரசியல் புகலிடம் கோரியுள்ளனர்.

ஹங்கேரிய அரசு அரசியல் புகலிடம் வழங்காவிடின், அவர்கள் இலங்கைக்கு அல்லது அவர்கள் பயணம் ஆரம்பித்த ருமேனியாவுக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படுவர் என்று தெரியவருகிறது.

## மண்ணெண்ணெய் இம்முறை 1 லீற்றர்

யாழ்ப்பாணம், ஜூலை 20

"மாஹோர"கப்பலில் எடுத்து வரப்பட்ட மண்ணெண்ணெய், குடும்பம் ஒன்றுக்கு ஒரு லீற்றர் என்ற அடிப்படையில் விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது

[ஓ-4]

## மோட்டார் ஊர்தி உரிமையாளர் கவனத்துக்கு

யாழ்ப்பாணம், ஜூலை 20

மோட்டார் ஊர்தி உரிமையாளர்கள் எதிர்வரும் 24ஆம் திகதி தொடக்கம் தங்களது ஊர்திகளைப் பதிவு செய்து கொள்ள வரும் போது —

உரிமை மாற்றம் செய்ய வரும்போது — தங்களது பிரிவு கிராம சேவையாளரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடவுச்சீட்டு அளவிலான இரண்டு புகைப் படங்களை எடுத்து வருதல் வேண்டும்.

இதனை மோட்டார் ஊர்திப் பகுதியினர் ஊர்தி உரிமையாளர்களின்கவனத்துக்கு அறியத் தருகின்றனர். (இ)

### புலிகளின் குரல் வானொலியில்

20 - 07 - 1995
வியாழன் இரவு

★ 8-02 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — சித்தமருத்துவக் குறிப்புகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம்-"உணவைப் பதனிடுவோம்" சித்திரம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — மொழியும் வாழ்வும்
★ 8-50 — எங்களின் தேசம்

21 - 07 - 1995
வெள்ளி காலை

★ 7-02—மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்

### தமிழீழ வானொலியில்

வியாழன் மாலை

★ 5-01 — சிந்தனைச் சிதறல்
★ 5-02 — எழுச்சிகீதம்
★ 5-10 — புதியவை
★ 5-15 — மழலைகளுக்காக
★ 5-30 — இசையும் கதையும்
★ 6-00 — சிந்தனைக்குச் சில விநாடிகள்
★ 6-02 — பொன்விளையும்
★ 6-10 — செய்திகள்
★ 6-15 — உணர்வின் ராகங்கள்

## ஹங்கேரியில் உயிரிழந்த 16 பேரின் பெயர்கள்

புடாபெஸ்ற், ஜூலை 20

ஹங்கேரியில் இழுவை டிரக் ஒன்றினுள் மூச்சுத்திணறி உயிரிழந்தவர்களில் 16 பேரின் பெயர்கள் வெளியாகியுள்ளன.

ஜேர்மனுக்குள் சட்டவிரோதமாக நுழைய முயன்றவர்களே இவ்வாறு மரணத்தைத் தழுவிக் கொண்டனர் என்பதும்.

மேலும் 19 பேர் அந்த டிரக்கில் இருந்து உயிருடன் மீட்கப்பட்டிருந்தனர் என்பதும் தெரிந்தவையே.

உயிரிழந்தவர்களின் சடலங்கள் மிக மோசமாக அழுகி சிதைந்து விட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

உயிரிழந்தவர்களின் 16 பேரின் பெயர்கள் வருமாறு:-

ராஜா, சிவலோகநாதன், விநாயகமூர்த்தி, ரில்வான் வள்ளியப்பன், ஹரிதரகுமார், மூர்த்தி பெற்றிஸோலா, சித்திகா சில்வா, மனோதாஸ் தென்னக்கோன் ஜெயக்குமார், வாசு, தர்மதாஸ், ரமேஸ், தர்மராஜா, சமிந்த எதிரிசிங்க, சுமணசேன.

இதேவேளை இச்சம்பவத்தில் உயிர் தப்பிய 19 பேரில் 16 பேரின் பெயர்கள் வருமாறு:-

லியோனாட் செபமாலை, சம்பந்த கனகேஸ்வரன், சதியபாலி விக்ரர் ஞானசீலன், செல்லையா விக்கினேஸ்வரன், ரய்ஸா சாவித்திரிகுமார், செல்லையா செல்வரட்ணம், இராஜா சுங்கா, மகேஸ்வரன் தெய்வேந்திரன், வீரசேகர சம்பத், மகாவத்த கொடித்துவக்கு, பெரேரா ஷமிந்த, பிரியந்தம், சரவணமுத்து சுப்பிரமணியம், இரட்ணம் ராஜா, தங்கேஸ் ரன்குமார், செல்வரட்ணம் கமலதாஸன்.

[ஓ-ஐ]

## சைக்கிள் யாருடையது?

யாழ்ப்பாணம், ஜூலை 20

சந்தரோடை வீதி, மாகியப்பிட்டிச் சந்திக்கு அருகில் அநாதரவான நிலையில் லுமாலா சைக்கிள்ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

சுப்பையா ஆனந்தராசா என்பவரால் கண்டெடுக்கப்பட்ட இந்த சைக்கிள் கோண்டாவில் உள்ள யாழ்.மாவட்டச் செயலகத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது

உரிமையாளர் தகுந்த ஆதாரங்களைக் காட்டி சைக்கிளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [இ]

## வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வரி செலுத்துவோருக்கான சிறப்புக் கூட்டங்களை நடத்துவதற்கு வருவாய் பகுதி ஏற்பாடுகள் செய்துள்ளது.

பின்வரும் அட்டவணையின்படி நடைபெற உள்ள இச்சிறப்புக் கூட்டங்களுக்கு அவ்வப் பகுதிகளைச் சேர்ந்த வரிக்குட்பட்ட வாணிப உரிமையாளர்களை தத்தமது வரி ஆவணத்துடன் குறித்த நேரத்திற்கு தவறாது வருகை தருமாறு வருவாய்ப் பகுதிப் பொறுப்பாளர் கேட்டுள்ளார்.

✶ வலிகாமம் வரி செலுத்தும் பிரிவு

யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் உ. அ. அ. பிரிவுகள் - 23-7-95 (ஞாயிறு) மு.ப. 10-30 மணிக்கு—யாழ். இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில்.

✶ தென்மராட்சி வரி செலுத்தும் பிரிவு

தென்மராட்சி, பச்சிலைப் பள்ளி, உ. அ. அ பிரிவுகள் — 23-7-95 (ஞாயிறு) பி. ப. 3 மணிக்கு — சாவகச்சேரி றிபேக் கல்லூரியில்.

✶ வடமராட்சி வரி செலுத்தும் பிரிவு

கரவெட்டி, பருத்தித்துறை வடமராட்சி கிழக்கு உ. அ. அ பிரிவுகள் — 24-7-95 (திங்கள்) பி.ப. 3-00மணிக்கு நெல்லியடி மத்திய கல்லூரியில். [அ]

## நேற்று முதல் வழமையான போக்குவரத்துச் சேவை

யாழ்ப்பாணம், ஜூலை 20

'முன்னேறிப் பாய்தல்' இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்டிருந்த யாழ். மாவட்ட சிற்றூர்தி சேவைச் சங்கங்களின் இணையத்தின் போக்குவரத்துச் சேவை தற்போது வழமைக்குத் திரும்பியுள்ளது.

நேற்று முதல் அனைத்து பாதைகளிலும் போக்குவரத்துச் சேவைகள் வழமைபோல் நடைபெற்றுவருவதாக யாழ். மாவட்ட சிற்றூர்திச் சேவைச் சங்கங்களின் இணைய வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-4)

### தேடப்படுகிறார்

பெரியவிளானைச் சேர்ந்த யேம்ஸ் ஸ்ரனிஸ்லாஸ் சுதர்சன் (நாதன்) வயது 16, பொது நிறம், உயரம் 5 அடி நீல அரைக்காற்சட்டையும், சாம்பல் நிற சேர்ட்டும் அணிந்திருந்தார். வல்லை வீதி, சங்கானையில் இருந்து இடம்பெயர்ந்து வரும்போது காணவில்லை. இவரைப்பற்றிய தகவல் அறிந்தவர்கள் தயவு செய்து தொடர்பு கொள்ளவும்.

யே. ஸ். றதிகா
425, நாவலர் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்

[37626]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போராட்டத்துக்கு ஆட்சேர்க்க கல்வி உலகின் உதவி தேவை

## தமிழ்ச்செல்வன் வேண்டுகோள்

வலிகாமம்தெற்கு, ஜூலை 20

''தமிழீழ விடுதலைப் போராட்டத்துக்கென மட்டுப்படுத்தப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கையை மேற்கொண்டுள்ளோம். இவ்வரையறுக்கப்பட்ட ஆட்சேர்ப்பு நடவடிக்கைக்குத் தேவையான சுமார் 2 ஆயிரம் போராளிகளை இயக்கத்துடன் இணைய வைப்பதில் கல்வி உலகின் உதவியை நாம் நாடியுள்ளோம்.''

தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சு. ப. தமிழ்ச்செல்வன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெற்ற உடுவில் - தெல்லிப்பழைக் கோட்ட பாடசாலை அதிபர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

யாழ்ப்பாண குடாநாட்டில் போராட்டத்தில் இணைந்து கொள்வோரின் தொகை மிகக் குறைவு. யாழ்ப்பாணத்தில் உள்ள போராளிகளில் சுமார் 800 பேர் வரையானவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்களாவர்.

ஆசிரிய சமுதாயத்தினூடாகத்தான் விடுதலைப் போராட்டங்கள் வளர்க்கப்பட்டதாக உலக சரித்திரங்கள் கூறுகின்றன.

விருப்பத்தோடும் முழு உணர்வோடும் வரும் போராளிகளையே நாம் சேர்த்துக் கொள்வோம்.

கல்விக்கு பெருமுக்கியத்துவம் கொடுக்கும் அதே சமயம் போராட்டத்துக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும்.

கல்வியும் போராட்டமும் ஒன்றுக்கொன்று காப்பரண்களாகும்.

மாணவ சமுதாயத்துக்கு விடுதலை உணர்வையூட்டி போராட்டத்தில் இணைய வைப்பதில் அதிபர்-ஆசிரியர்கள் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

இவ்வாறு திரு. தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. வே. பாலகுமார் அங்கு உரையாற்றுகையில் —

உலக விடுதலை இயக்கங்கள் பலவற்றில் ஆளணிகள் நிறைந்திருந்தும் ஆயுத பற்றாக்குறையால் கஷ்டப்படுகின்றன. இங்கு ஆயுதங்கள் போதியளவு இருந்தும், ஆளணியின்மையால் கஷ்டப்படவேண்டி உள்ளது.

மாணவர்களுக்கு போராட்டச் செய்தியைச் சொல்வதன் மூலம் வகுப்பறைகளை போராட்ட ஆயுதங்களாக மாற்றஞ் செய்ய வேண்டும்— என்றார். (ஐ-152)

## சந்திரிகா சாட்சியமளிக்க தேவையில்லை

கொழும்பு, ஜூலை 20

விஜயகுமாரதுங்கா கொலைவழக்கு விசாரணைகளில் அவரது மனைவியும் ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்கா ஆஜராகவோ, சாட்சியமளிக்கவோ தேவையில்லை என்று விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தேவை ஏற்படின் வழக்கு விசாரணையில் சாட்சியமளிக்கத் தான் தயார் என்று ஜனாபதி சந்திரிகாகுமாரதுங்கா ஆணைக்குழுத் தலைவருக்கு கடிதம் மூலம் தெரிவித்திருந்தது தெரிந்ததே. (எ)

# பாடசாலைகளின் சேத விவரங்களை திரட்டுமாறு அதிபர்களுக்கு அறிவிப்பு

வலிகாமம்தெற்கு, ஜூலை 20

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்தவாரம் ஸ்ரீலங்கா இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது பாடசாலைகளுக்கு ஏற்பட்ட சேதவிவரங்களை உடனடியாகக் கணக்கெடுத்து அந்தந்த கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு யாழ்ப்பாணம் கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. க. கந்தசாமி அறிவித்துள்ளார்.

வலிகாமம் வடக்கு, வலிகாமம் மேற்கில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் பின்னர்—

பாடசாலைகளுக்கேற்பட்ட சேதவிவரங்கள், நிலைப்பாடுகள், ஆசிரியர் — மாணவர் இழப்புக்கள் போன்ற ஒவ்வொரு சம்பவங்களையும் அதிபர்கள் சம்பவத்திரட்டுப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டுமெனவும்—

அவற்றின் பிரதியினை பிரதிக்கல்விப் பணிப்பாளர்களுடாக அனுப்பி வைக்குமாறும் அவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலைகளின் சேதவிவரங்கள் பற்றிய அறிக்கை பாடசாலைகளை தொடர்ந்து இயங்க வைப்பது; பரீட்சைகளை நடத்துவது பற்றிய முடிவுகளை மேற்கொள்ளவும்—

அவசியம் ஏற்பட்டால் பரீட்சையை பின்போடுமாறு பரீட்சை ஆணையாளருக்கு வேண்டுகோள் விடுக்கவும் உதவும் என்றும் அவர் தெரிவித்தார்.

எதிர்காலத்தில்பாடசாலைகளை தொடர்ந்து நடத்த தேவையான சூழ்நிலைகளை அதிபர்-ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்' (ஐ-152)

# இறப்புக்களை உடன் பதிவு செய்ய ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஜூலை 20

முன்னேறிப் பாய்தல் இராணுவ நடவடிக்கை காரணமாக உயிரிழந்தவர்களின் இறப்பை உடன் பதிவு செய்ய அரச அதிபர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

மரணமானவர்களின் உறவினர்கள் தமது பிரதேச செயலகத்தில் உரிய விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதனை பூர்த்தி செய்து தமது பிரிவு கிராம அலுவலரின் சிபாரிசுடன் பிரதேச செயலரிடம் ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பிறப்பு, இறப்புப் பதிவாளர்கள் யாவரும் தமது பிரிவுக்குரியபிரதேச செயலருடன் தொடர்பு கொண்டு உறுதிப்படுத்தப்பட்ட பிரதிக் கிளையைப் பெற்று, இறப்புக்களை பதிவு செய்து சான்றிதழ்களை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அரச அதிபர் கேட்டுள்ளார். (ஐ 3)

# வேக வைத்த அரிசியை விட்டு சென்ற படையினர்

## அருகில் இரு ஆட்டுக் கடாக்கள்!

சண்டிலிப்பாய் சந்திக்கு அருகாமையில் உள்ள — பூட்டப்பட்ட — வீடொன்றை உடைத்து உட்புகுந்த படையினர் அங்கு பெரிய கிடாரம் ஒன்றில் அரிசியை வேக வைத்த நிலையில் கைவிட்டுச் சென்றுள்ளனர். அருகில் — அந்த வீட்டினுள் இரண்டு ஆட்டுக் கடாக்களும் கட்டப்பட்டு நின்றன.

வீட்டின் கொடியில் இராணுவச் சீருடைகள் உலர விட்ட நிலையில் அவற்றை எடுக்காமலேயே படையினர் ஓடித்தப்பியுள்ளனர்.

வீட்டிலிருந்த பெறுமதியான பொருள்கள், உடுபுடைவைகள் சூறையாடப்பட்டிருந்தன.

வீட்டின் சுவர்களில் வெண்கட்டியினால் ஆங்கிலத்திலும் சிங்களத்திலும் படையினர் பல வசனங்களைக் கிறுக்கிச் சென்றுள்ளனர்.

காரைநகரிலிருந்து இடம்பெயர்ந்து சண்டிலிப்பாயில் வசித்து வந்த ஒருவரின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றது. (உ-175)

# பெரும் அழிவுக்கு வழிகோலியுள்ள படை நடவடிக்கையை நிறுத்துக!

## யாழ். இந்துசமயப் பேரவை ஜனாதிபதிக்கு கடிதம்

யாழ்ப்பாணம், ஜூலை 20

பெரும் அழிவுக்கு வழிகோலியுள்ள இராணுவ நடவடிக்கையை நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையைத் தீர்க்க நடவடிக்கை எடுங்கள்.

— யாழ்ப்பாணம் இந்து சமயப்பேரவை சிறிலங்கா ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுக்கு அனுப்பியுள்ள கடிதம் ஒன்றில் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இக் கடிதத்தின் பிரதிகள் கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதரகங்களுக்கும் எதிர்க்கட்சித் தலைவருக்கும் மற்றும் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாண மாவட்டத்தில் கடந்த 09 - 07 - 1995 ஆம் திகதி தொடக்கம் தங்கள் இராணுவத்தால் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் நடவடிக்கை காரணமாக அப்பாவிப்பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் கோடிக்கணக்கான சொத்துக்கள் நாசமாக்கப்பட்டுள்ளன. இவற்றைத் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

இந்நடவடிக்கைப் பற்றிப் பொதுமக்களுக்கு போதுமான முன் அறிவித்தல் கொடுக்கப்படவில்லை என்பதையும் விமானத்தாக்குதல்களும், எறிகணைத்தாக்குதல்களும் நடவடிக்கைப் பிரதேசத்தில் மாத்திரமன்றிக் குடாநாடு முழுவதும் பரவலாக மேற்கொள்ளப்படுகின்றது என்பதையும் தங்கள் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகின்றோம்.

இத்தாக்குதல்கள் காரணமாக இதுவரை 250 ற்கும் மேற்பட்ட பொதுமக்கள், குழந்தைகள், பெண்கள் உட்படக் கொல்லப்பட்டுள்ளனர். ஏராளமான குடிமனைகள் நாசமாக்கப்பட்டுள்ளன. இந்துக் கோயில்கள், தேவாலயங்கள் ஆகியன அழிக்கப்பட்டுள்ளன.

மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட பொதுமக்கள் இராணுவ நடவடிக்கைப் பிரதேசங்களில் இருந்தும் ஏனைய பிரதேசங்களில் இருந்தும் தங்கள் சொந்த வீடுகளையும், உடைமைகளையும் கைவிட்டு உடுத்த உடுப்புக்களுடன் இடம்பெயர்ந்து கோயில்களிலும், தேவாலயங்களிலும் தஞ்சம் அடைந்துள்ளனர்.

இவ்வாறு நவாலி புனித பீற்றஸ் தேவாலயத்தில் தஞ்சம் அடைந்திருந்த பொதுமக்கள் மீது ஈவிரக்கம் அற்ற முறையில் மேற்கொள்ளப்பட்ட விமானத்தாக்குதல்களால் 100க்கும் மேற்பட்ட பொதுமக்கள் — குழந்தைகள் — பெண்கள்உட்பட கொல்லப்பட்டுள்ளனர். இப்படு கொலைத் தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இச்சம்பவம் பற்றி உண்மைக்குப் புறம்பான தகவல்களை அரசாங்கம் வெளியிட்டுள்ளதால் இது பற்றி உடன் விசாரணை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பொதுமக்கள் தஞ்சம் அடைந்துள்ள வணக்கத்தலங்கள் மீதும், பாடசாலைகள், மருத்துவமனைகள், அகதி முகாம்கள் ஆகியவற்றின் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளுவதை நிறுத்துவதற்கு ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். அழிவுக்கு வழிகோலியுள்ள இந்த இராணுவ நடவடிக்கையை உடன் நிறுத்தி பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் தங்களை மீண்டும் ஒருமுறை கேட்டுக் கொள்ளுகின்றோம்.

ஆக்கிரமிக்கப்பட்ட பிரதேசங்களில் இருந்து இராணுவத்தை மீளப்பெற்று பொதுமக்கள் தங்கள் வீடுகளுக்கு திரும்ப ஏற்பாடு செய்யுமாறும் கொல்லப்பட்டவர்களுக்கும், காயமடைந்தவர்களுக்கும், உடைமைகளை இழந்தவர்களுக்கும் உடனடி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் தங்களைக் கேட்டுக் கொள்ளுகின்றோம். அழிக்கப்பட்ட இந்துக் கோயில்களையும் தேவாலயங்களையும் புனரமைக்கவும் ஏற்ற நடவடிக்கை எடுக்குமாறு [illegible] விக்கப்பட்டுள்ளது. (ஐ)

# வித்துடல் விதைப்பும் நினைவுக் கல் நடுகலும்

யாழ்ப்பாணம், ஜூலை 20

காங்கேசன்துறை துறைமுகத்தினுள் ஊடுருவி கடற்படைக் கப்பலைத் தகர்த்த தாக்குதலில் வீரச்சாவடைந்த கடற்கரும்புலிகள், கடற்புலிகளின் நினைவுக் கல் நாட்டலும், வித்துடல் விதைப்பும் இன்று நடைபெறவுள்ளன.

கடற்கரும்புலி கப்டன் தமிழினி, கடற்புலி மகளிர் படையணிச் சிறப்புத் தளபதி லெப். கேணல் மாதவி, கடற்புலி லெப். பூமதி, கடற்புலி 2ஆம் லெப். நித்தியா, கடற்புலி லெப். சோபிதா ஆகியோரின் திருவுருவப் படங்களும் —

கடற்புலி லெப். கேணல் நரேஸின் வித்துடலும் இன்று பிற்பகல் 5 மணியளவில் ஊர்திப் பவனியாக எடுத்துவரப்பட்டு நெல்லியடிச் சந்தியில் மக்களின் இறுதி வீரவணக்கத்துக்சாக வைக்கப்படும்.

அங்கு வீரவணக்கக் கூட்டம் முடிவடைந்ததும் வடமராட்சி மாவீரர் துயிலும் இல்லத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு சகல இராணுவ மரியாதைகளுடன் வித்துடல் விதைப்பும், நினைவுக் கல் நடுகலும் இடம்பெறும். (ஐ)

# குரும்பசிட்டி கனகரத்தினம் கண்டி வீட்டில் கைது!

## ஆவணங்கள் கைப்பற்றப்பட்டன

கொழும்பு ஜூலை 20

உலகத் தமிழர் கல்வி ஆய்வு நிலையத்தின் செயலாளர் குரும்பசிட்டி கனகரத்தினம் கண்டி முல்கம் பொலவில் உள்ள தனது வீட்டில் வைத்து கடந்த ஞாயிறன்று பொலீஸாரால் கைது செய்யப்பட்டார்.

சந்தேகத்தின் பேரில் அவரது வீட்டில் இருந்த தமிழ் பத்திரிகைகள், சஞ்சிகைகள், புகைப்படங்கள் போன்ற ஆவணங்கள் பலவற்றை பொலீஸார் கைப்பற்றினர்.

இவரை விசாரிப்பதற்காக கொழும்பில் இருந்து விசேட இரகசியப் பொலீஸார் கண்டிக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

1958ஆம் ஆண்டில் இருந்து சேகரிக்கப்பட்ட பல ஆவணங்களையும், ''போட்டோஸ்ரட்'' இயந்திரம் தட்டச்சு இயந்திரம் என்பனவற்றையும் அவரது வீட்டில் இருந்து பொலீஸார் கைப்பற்றியுள்ளனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மரக்கதிரை பின்னும் வயர் மொத்தமாகவும், சில்லறை யாகவும் விற்பனைக்குண்டு. வியாபாரிகளுக்கு விசேட கழி வுண்டு. ராஜன் பின்னலகம், 286, ஸ்ரான்லி வீதி [ஆரிய குளம் சந்தி]. [37596]

பூட்டிக் கழட்டாத யாவலை மார்க் அஸ்பெஸ்ரஸ் கூரை தகடு 12 அடி ஏழு, 10 அடி பதினான்கு, 9 அடி இரண்டு விற்பனைக்குண்டு. இல: 55 சீனியர் லேன் கலட்டி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் [37604)

### SPECIAL ANTENNA

To view Rupavahini, Madras Programmes Fixing Special, T. V. Antenna, Repairing Antennas, Radios-T. V. Decks, Clocks and Watches. Venus Dilka Watch and Radio Works, 284, Stanley Road (Ariya-kulam Junction), Jaffna. Branch: KandyRoad, Chava-kachcheri. (C-1686)

### தேவை

வெற்று ஜாம் (Jam) போத்தல்கள், பிளாஸ்டிக் மூடியுடன் கூடிய வீவா, ஹார்லிக்ஸ் போத்தல்கள் எம்மால் கொள்வனவு செய்யப்படுகிறது. ரேஸ்ட் லைன் இன்டஸ்ரீஸ், (தனி] லிமிட்டெட். 14, சீனியர் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி-1903)

### குரக்கன் தேவை

குரக்கன் தேவை. தொடர்பு கொள்ளவும். அண்ணா பாம், இணுவில். [சி-1902]

### தவறிவிட்டது

கறுப்பும் வெள்ளையும் கலந்த ஓர் அல்ஷேசன் நாய் சுன்னாகம் புகையிரத நிலையத்துக்கு அண்மையில் 14-7-95 அன்று தவறிவிட்டது. கண்டவர்கள் பின்வரும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் தரப்படும். விமாகி, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் அல்லது மேற்றன் திருஞானசம்பந்தர் இல்லம், உரும்பிராய் வீதி, உரும்பிராய். (37585]

### புலமைப் பரிசில் பரீட்சை

புதிய பாடத்திட்டத்திற்குரிய வழிகாட்டி "பொது விவேகம்" 97/- வினாத்தாள் I, IIற்குரியது. வெளியீடு: அன்ரன் பதிப்பகம். எல்லாப் புத்தகசாலைகளிலும் பெற்றுக்கொள்ளலாம். 18% கழிவுடன் மொத்தமாகப் பெற யாழ்ப்பாணப் புத்தக நிலையம், 448, மருத்துவமனை வீதி, யாழ்ப்பாணம். (சி-1717)

## சிங்கள பெண்கள் அமைப்பு கோரிக்கை

கொழும்பு, ஜூலை 20

யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் இராணுவ நடவடிக்கைகள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்று தென்பகுதியைச் சேர்ந்த தாய்மார், புதல்வியர் அமைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

சிங்களப் பெண்களை பெரும்பான்மையாகக் கொண்ட இந்த அமைப்பில் 18ஸ்தாபனங்கள் அங்கம் வகிக்கின்றன. (ஐ)

## அறிவித்தல்

### NEW SCIENCE ACADEMY & NEW SCIENCE HALL JAFFNA

சகல வகுப்புக்களும் வழமையான நேர அட்டவணைப்படி 22-07-1995 சனிக்கிழமை முதல் நடைபெறும். ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் அனைவரையும் சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

— நிர்வாகிகள்.

(சி-1909)

### தமிழீழ காவல்துறை

## பதவி வெற்றிடங்கள்

தமிழீழ காவல்துறையில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் பதவிகளுக்கு தமிழீழ பிரஜைகளிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகைமையுடைய விண்ணப்பதாரர்கள் 1995-07-25ந் திகதி வரை தமிழீழ காவல்துறை பழைய பூங்கா அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும் ஆண்/பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

**01) உப பரிசோதகர் தரம்.**

1) வயது : 18 – 35 வரை

2) கல்வித்தகைமை : க. பொ. த. (சாதாரணதரத்தில்) 6 பாடங்கள். தமிழ், கணிதம்/எண் கணிதம் உட்பட 5 பாடங்களில் திறமைச் சித்தி. அல்லது க. பொ. த. (உயர் தரம்)

3) உயரம் : 5' 6''

**02) காவலர் தரம்.**

1) வயது : 18 – 35 வரை

2) கல்வித்தகைமை : க. பொ. த. [சாதாரண தரத்தில்] தமிழ், கணிதம்/எண் கணிதம் உட்பட 6பாடங்கள் சித்தி.

3) உயரம் : 5' 6''

பொறுப்பாளர்
தமிழீழ காவல்துறை

[சி/1905]

### நெஞ்சிலே கிறெடுக்கும் 6ஆவது ஆண்டு உணர்வுக்கோடுகள்



அமரத்துவம் அடைந்த
செல்வி
## றஞ்ஜிதநீலா கணபதிப்பிள்ளை

மண்ணிலே குடிகொள்ளப் பிறந்தது:
**19-09-1957**

விண்ணிலே குடிவைக்க எழுந்தது:
**20-07-1989**

நீயொரு கனவு அல்ல எமது நெஞ்ச
அறையிலே நினைவுக் கதை
எக்கதை மறந்திட்டாலும் இங்கு நாமோ
உன்கதை மறக்கமாட்டோம்
ஆவியாய் வந்தென்றாலும் எமது பக்கம்
அமர்ந்து எம்மோடிருப்பாய்

அன்னை, தந்தை, சகோதரங்கள், மைத்துனர், மைத்துனிமார், மருமக்கள், பெறாமக்கள்.

தகவல்:
மா. விஜயரத்தினம்,
152, சேர் பொன் இராமநாதன் வீதி,
யாழ்ப்பாணம். (37577)

### திறந்தபல்கலை. மாணவருக்கு

யாழ்ப்பாணம் ஜூலை 20 இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் அனைத்து மாணவர்களையும் மற்றும் விரிவுரையாளர்களை யும் எதிர்வரும் சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். பிராந்திய நிலையத்தில் சமுகமளிக்குமாறு பிராந்திய இயக்குநர் அறிவிக்கின்றார்.

## விற்பனைக்கு

"லாண்ட் மாஸ்ரருக்கு" பயன்படுத்தும் முன் ரயர்கள் ஐந்து விற்பனைக்குண்டு.

SIZE 5-00-12

**LANKA TYRE**

தொடர்பு:
**உதயன் பணிமனை**
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

## ST. PATRICK'S COLLEGE JAFFNA.

School will start functioning again from Friday, 21-07-1995

— Rector

(C-1908)

## அறிவித்தல்

### யாழ்ப்பாணக் கல்லூரி தொழில் நுட்ப நிறுவனம்

நாளை வெள்ளிக்கிழமை 21-07-1995 வட்டுக்கோட்டை நிறுவனத்தில் ஆசிரியர்கள், ஊழியர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

— இயக்குநர்.

[சி-1907]

### தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

யாழ் – மாவட்டம்

## பொதுச்சபைக் கூட்டம்

இடம்:- புதிய விஞ்ஞான கல்வி நிலையம் (எழிலகம் முன்பாக)

காலம்:- 22 ஆம் திகதி (சனி) பி. ப. 2மணி

விடயம்:-

தற்போதுள்ள சூழ்நிலையில் நிறுவனங்கள் கடைப்பிடிக்க வேண்டிய விடயங்களும் தொடர்ந்து இயங்குவதற்கான அனுமதி வழங்கலும் தொடர்பாக அரசியல் துறையின் தனியார் கல்வி நிர்வாகப் பிரிவின் உறுப்பினர்கள் கலந்து தெரிவிக்கவுள்ளனர்.

தவறாது கலந்து பல விளக்கங்களை பெற்று தொடர்ந்து இயங்குமாறு கோட்டுக்கொள்கின்றேன்.

★ அன்று பிற்பகல் 1மணி முதல் சகல நிறுவனங்களுக்கும் விடுமுறையாகும்

பொதுச் செயலாளர்
யாழ் மாவட்டம்

[சி 1910)

## நன்றி நவிலல்

### திருமதி செல்வரத்தினம் கந்தப்பு

மண்ணகம்: **13-10-1928**

விண்ணகம்: **16-06-1995**

திருமதி செல்வரத்தினம் கந்தப்பு அவர்களின் மரணச்செய்தி கேட்டு எமது இல்லத்திற்கு வந்து எமது துன்பத்தில் பங்கு கொண்டோருக்கும், அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், அந்தியேட்டியில் கலந்து சிறப்பித்த உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

நன்றி

— குடும்பத்தினர்.

நவகுடில்,
துன்னாலை மேற்கு,
கரவெட்டி.

[சி-1906]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன்**
292/2 நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்

## யார், யாரை விடுவிப்பது?

தமிழர்களுக்கு நீதியான தீர்வு ஒன்றைத் தாம்பாளத்தில் வைத்துத் தந்து, இலங்கையில் சமாதானத்தையும் அமைதியையும் உருவாக்கப் போவதாகக் கூறிப் பதவிக்கு வந்த சந்திரிகா அரசாங்கம்—

இப்போது போரை நடத்துவது ஏன்? யாழ்ப்பாணத்தின் மீது பெருந் தாக்குதலைத் தொடுத்து நடக்குப்படுவது ஏன்?

அரசாங்கத் தரப்பில், அதற்கு ஆதரவான சிங்களவர் தரப்புகளில், பல காரணங்கள் கூறப்படுகின்றன. போரின் மூலம் சமாதானத்தைக் காண்பது; யாழ்ப்பாணத் தமிழர்களை விடுதலைப்புலிகளிடம் இருந்து விடுவிப்பதற்காகவே போர் நடத்தப்படுகிறது; அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவதற்காகவே போர் நடத்தப்படுகிறது; என்பன அவை.

விஜேதுங்கா அரசாங்கம் பயங்கரவாதத்தை ஒழிப்பதற்காகவே வடக்கு - கிழக்கில் போர் நடத்துவதாகக் கூறி தமிழர்களைக் கொன்றொழித்ததோடு, தமிழ் மண்ணையும் சிதைத்தது.

சந்திரிகா அரசோ, தமிழர்களை விடுவிப்பதாகக் கூறி, அவர்களை இனப்படுகொலை செய்து, அவர்தம் மண்ணையும் சீரழித்திருக்கிறது.

''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் மூலம் ஒன்பதாம் திகதி வலி மேற்கு, வலி வடக்கு பகுதிகளுக்குள் பிரவேசித்த இராணுவம், ஒரு வார காலத்தில் அந்தப் பிரதேசங்களை மயான பூமிகளாக்கிவிட்டுச் சென்றுள்ளது.

ஒருவாரத்தில் முந்நூறுக்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்றதோடு மட்டுமன்றி பலகோடி ரூபா பெறுமதியான உடைமை — பொருளாதார — அழிவையும் இராணுவம் ஏற்படுத்திச் சென்றுள்ளது. ஒரு மாத காலம் தங்கியிருந்தால், வலிமேற்கு, வலி வடக்குப் பகுதிகள் வனாந்தரமாக உருவம் மாறியிருக்கும்.

தமிழர் பிரதேசத்தை ஆக்கிரமிக்கும் இராணுவத்தினர் ஆரம்பத்தில் அன்பு காட்டுபவர்களாகவும், ஆதரவளிப்பவர்களுமாகக் காட்டிக்கொள்ளக்கூடும், நாளாக ஆக, புலிகளைத் தேடுவதாகக் கூறி சுற்றிவளைப்பு, தேடுதல் என்ற கொடூரங்களைத் தொடங்குவார்கள். 1987ஆம் ஆண்டுக்கு முன்னர் ஸ்ரீலங்கா இராணுவம் செய்த அடாவடித்தனங்களை, மறந்துவிட முடியுமா?

அதனை நினைவில் கொண்டே 99.9 சதவீதமான மக்களும் இராணுவம் உள்ளே வருகிறது என்பதனை அறிந்ததும், இரவோடு இரவாக, கால் நடையாக, கையில் அகப்பட்டதோடு, கொண்டு பாதுகாப்பு நாடி இடம் பெயர்தார்கள்.

தமிழ் மக்கள் தங்கள் மண்ணில் கால் பதிக்கும் ஸ்ரீலங்கா சிப்பாயை பாதுகாப்புத் தருபவனாக அன்றி, படுகொலைகாரனாகவே பார்க்கிறார்கள் என்பதனை இதிலிருந்து சிங்கள அரசும், வெளி உலகும் புரிந்து கொள்ளட்டும்.

இத்தகைய பின்புலத்தில்—

தமிழ் மக்களை சிங்கள அரசால் விடுவிக்க முடியாது; தமிழர்கள் தாமே தமது விடுதலையை அடையவேண்டும்; அடைந்தே தீருவர். அரசு இனியாவது இதனை உணர்ந்து கொள்ளட்டும்.

## அதிபர்களுக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஜூலை. 20

யாழ்ப்பாணம், நல்லூர், கல்விக்கோட்டங்களின் பாடசாலைகளை மீளத் திறப்பது சம்பந்தமாக அதிபர்களுக்கான கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10மணிக்கு யாழ். இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறும்,

சகல அதிபர்களையும் குறிப்பிட்ட நேரத்துக்கு தவறாது வருகை தருமாறு கோட்டப் பிரதிக் கல்விப்பணிப்பாளர் கேட்டுள்ளார்.

[இ]

## தேடப்படுவோர் விவரம்

★ வடலியடைப்பில் இருந்து இடம்பெயர்ந்து ஆவரங்கால் தெற்கு கோணேஸ் வீதியில் தங்கியிருக்கும் சின்னப்பு முத்தையா மனைவி அமிர்தவல்லியை (செல்வம்) தேடுகிறார்.

★ குடத்தனை குருமனையைச் சேர்ந்த செல்லத்துரை சங்கானை சேர்ச் வீதியைச் சேர்ந்த திருமதி செல்வமணி இருபைராஜ் குடும்பத்தைத் தேடுகிறார்.

★ குடத்தனை குருமனையைச் சேர்ந்த சி. யோன் சங்கானை சேர்ச் வீதியைச் சேர்ந்த (சங்கானை ப.நோ.கூ. சங்க எழுதுவினைஞர்) திருமதி சி. பொன்னம்பலம் குடும்பத்தினரைத் தேடுகிறார்.

★ குடத்தனை குருமனையைச் சேர்ந்த ஜெயராஜ் சண்டிலிப்பாய் இந்து மகா வித்தியாலய ஆசிரியர் துரைராஜா குடும்பத்தினரைத் தேடுகிறார்.

★ உடுவில், மல்வத்தைச் சேர்ந்த வே முருகையா தமது மகள் சியாமளாவைத் தேடுகிறார்.

★ கட்டுடை ''சுவர்ணமகாலை''ச் சேர்ந்த நடராசா பேரின்பநாயகம், கட்டுடை வைரவர் கோவிலடியைச் சேர்ந்த தமது மைத்துனி திருமதி மீனாம்பிகை சபாரட்ணத்தைத் தேடுகிறார்.

★ தற்போது இணுவில் கிழக்கு மஞ்சத்தடி ''மனோவாசா''வில் வசிக்கும் வை.க. சிற்றம்பலம் பண்டத்தரிப்பு செட்டி குறிச்சியைச் சேர்ந்த தமது மகன் சிற்றம்பலம் சிவானந்தராஜா, மற்றும் திருமதி கமலாசனி சிவானந்தராஜா ஆகியோரைத் தேடுகிறார்.

★ சுதுமலை தெற்கு, ஐங்கரன் வீதியைச் சேர்ந்த த. மகாலிங்கம், சங்கானை நிக்சாமத்தைச் சேர்ந்த நாகராசா ஸ்ரீசங்கரை (சங்கரை) தேடுகிறார்.

★ சங்கானை வல்லை வீதியிலிருந்து இடம்பெயர்ந்து அரியாலை, 425, நாவலர் வீதியில் தங்கியிருக்கும் ஜே.எஸ். றகிா தமது சகோதரர் ஜே.எஸ். சுதர்சனைத் தேடுகிறார்.

★ நீர்வேலி தெற்கு, இராசவீதி, எம். ரி. பொன்னம்பலம் தோட்டத்தில் தங்கியிருக்கும் கருகம்பனையைச் சேர்ந்த தம்பையா சிவநேசன் தமது தம்பியார் த. விஷ்ணுகாந்தன், மற்றும் இராசலிங்கம் (இராசன்) ஆகியோரைத் தேடுகின்றார்.

## கச்சதீவு விவகாரத்தில் தமிழக கட்சிகள் ஒற்றுமை

இந்திய சுதந்திர தினமான ஓகஸ்ட் 15 ஆம் திகதி கச்சதீவில் இந்திய தேசியக் கொடியை ஏற்றுவது என்ற பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் எஸ் ராமதாஸின் திட்டத்துக்கு —

மறுமலர்ச்சித் திராவிட முன்னேற்றக் கழகம் தனது முழு ஆதரவையும் வழங்கவுள்ளது.

கச்சதீவை இந்தியாவுக்குச் சொந்தமாக்கவேண்டும்என்ற இந்த இயக்கத்துக்கு திராவிட முன்னேற்றக் கழகம் தனது ஆதரவைக்தெரிவித்துள்ளது தமிழகத்தின் ஆளும் கட்சியான அ.தி.மு.க இதுவிடயத்தில் மௌனம் சாதித்து வருவதாகத் தமிழகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

கச்சதீவில் இந்திய தேசியக் கொடியை தி.மு.க ஏற்றப் போவதாக, கொழும்புத் தகவல்களை அடிப்படையாக வைத்து நேற்றைய உதயனில் வெளியான செய்தி தவறானதாகும். (அ)

## அரசின் தீர்வுத் திட்டத்துக்கு முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவு

### அலரி மாளிகையில் சந்திப்பு

கொழும்பு, ஜூலை.20

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான அரசாங்கத்தின் திட்டத்திற்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் அதன் பூரண ஆதரவை வழங்கும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவரான அமைச்சர் அஷ்ரப் மற்றும் காங்கிரஸின் அரசியல் குழு உறுப்பினர்கள், எம் பிக்கள் நேற்று பிற்பகல் அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிகாவைச் சந்தித்து தமது ஆதரவைத்தெரிவித்துக் கொண்டனர்

இரண்டுமணி நேரம் இடம்பெற்ற இந்கப் பேச்சுவார்த்தைகளின் போது காங்கிரஸ். இனப்பிரச்சினை தொடர்பான தனது கருத்தை விளக்கிக் கூறியதாகத் தெரிவிக்கப்பட்டது. [ஒ]

## அதிபர் ஆசிரியர்கள் கூட்டங்கள்

யாழ்ப்பாணம், ஜூலை 20

சங்கானை, சண்டிலிப்பாய் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் அதிபர்கள் ஆசிரியர்களுக்கான கூட்டங்கள் அவ்வப் பாடசாலைகளில் நாளை 21 ஆம் திகதி காலை 9 மணிக்கு நடைபெறும்.

சகல ஆசிரியர்களும் தவறாமல் சமுகம் கொடுக்குமாறு வலயம் - 2 இன் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கிறார் (இ)

## இடம்பெயர்வு சம்பந்தமான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஜூலை 20

வலிகாமம் வடக்கு தெல்லிப்பளைப் பிரதேச செயலகம் ஒழுங்கு செய்துள்ள, இடம்பெயர்வு சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்று இன்று வியாழன் முற்பகல் 11 மணிக்கு உரும்பராயில் உள்ள வயாவிளான் மத்திய மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறும்.

இக் கலந்துரையாடலுக்கு பிரதேச செயலகப் பிரிவில் உள்ள வெளிக்கள மற்றும் உள்கள உத்தியோகத்தர்களும், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகளும், அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டுள்ளனர். (இ-எ)

## நிர்வாகசேவை பரீட்சை ஒத்திவைப்பு

கொழும்பு, ஜூலை.20

இலங்கை நிர்வாகசேவைக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்வதற்கான மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப்பரீட்சை பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை நடைபெறுவதாக இருந்தது. (எ)

## ஒய்வூதிய வவுச்சர்கள் வங்கிக்கு அனுப்பப்பட்டன

யாழ்ப்பாணம், ஜூலை 20

யாழ் மாவட்ட அரசாங்க, உள்ளூராட்சி ஒய்வூதியர்களின் ஜூலை மாத ஒய்வூதிய வவுச்சர்களும், காசோலைகளும் செயலகத்திலிருந்து நேற்று மாலையே அந்தந்த வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்று யாழ். அரச அதிபர் திரு.கே. பொன்னம்பலம் தெரிவித்தார்.

சகல ஒய்வூதியர்களும் ஒய்வூதிய அடையாள அட்டை அல்லது தேசிய அடையாள அட்டையைக் காண்பித்து வங்கிகளில் வவுச்சர்களைப் பெற்று ஒய்வூதிய கொடுப்பனவை பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை இலங்கை வங்கியின் மானிப்பாய், சுன்னாகம், காங்கேசன்துறை கிளைகள் யாழ் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள இலங்கை வங்கியின் மாவட்டச் செயலகத்தில் தற்காலிகமாக இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சண்டிலிப்பாய்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரு தினங்களுக்கு முன்னர் பலாலியில் இருந்து சண்டிலிப்பாய் வந்திருந்தது.

டலிகளினால் இவர்கள் சில சமயம் பிடித்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று படை வட்டாரங்கள் கருதுவதாக சண்டே ரைம்ஸ் வார இதழ் செய்தி வெளியிட்டுள்ளது. (இ)

## அளவெட்டியில்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏற்றிய பொருள்களையெல்லாம் அப்படியே விட்டுவிட்டு ஓடினர்.

சிறிது நேரம் கழித்து மீண்டும் வந்தவர்கள் ஏற்றிய பொருள்களுடன் மீண்டனர்.

இதனால் இப்பகுதி வீதிகளில் நீண்டதோர் ஊர்திப் பவனி போவதுபோல் இருந்தது. அம்மி, குழவி முதல் குசினிச் சமான்கள், வீட்டுத் தளபாடங்கள், கோழி, ஆடு, மாடுகள், நாய் பூனை இவற்றுடன் கிளிக்கூடுகள், புறாக்கூடுகள் என்று எல்லாவற்றையும் அவர்கள் ஏற்றிக்கொண்டு செல்வதைக் காணக்கூடியதாக இருந்தது.

இராணுவம் உடைத்த வீட்டுக் கதவுகளுக்கு வேறு பூட்டுப் பூட்டியதாகவும் ஆனால் மறுநாள் காலை வந்துபார்த்த போது பூட்டுக்கள் உடைத்து பொருள்கள் களவாடப்பட்டிருந்தது எனவும் சிலர் தெரிவித்தனர். (இ-13)

## ஜி. சி. ஈ. ...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வடிக்கையை அடுத்து இடம் பெயர்ந்த மக்கள் தமது சொந்த இடங்களுக்கு திரும்பியுள்ளதால்—

பரீட்சையை நடத்துவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு நேற்று மாலை செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் ஊடாக பரீட்சை ஆணையாளருக்கு. யாழ். கல்விப் பணிப்பாளர்கள் இணைந்து தகவல் அனுப்பி வைத்தனர்.

யாழ். குடாநாட்டின் தற்போதைய நிலைமை குறித்து நேற்று பரீட்சை ஆணையாளர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு ஊடாக யாழ். கல்வித் திணைக்களத்தை கேட்டிருந்தார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

[ஒ-எ-4]

## அடுத்த...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலோபாயத்தை கையாள்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும் —

இந்தப் புதிய உத்தி மூலம் படையினரின் உயிரிழப்பு, காயப்படுபவர்களின் எண்ணிக்கையை குறைக்க வாய்ப்பு அதிகம் உண்டு எனவும் — அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

தற்பொழுது 'இராணுவம் பலாலி முகாமுக்கும் காரைநகர் துறைமுகத்துக்கும் இடையிலான பாதையை பயன்படுத்தும் 'வகையில் அப்பகுதியை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளது என்றும் —

அதன் மூலம் கொழும்பில் இருந்து வரும் ஆயுதங்கள் ஆயுத தளபாடங்களைத் தடையின்றி பலாலிக்கு எடுத்துச் செல்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது என்றும் — பாதுகாப்புப் படையினர் கூறுவதாக அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

கடல், வான். தரை ஆகிய மூன்று வழிகளிலும் யாழ்ப்பாணம் மீது தாக்குதலை மேற்கொள்ளக் கூடிய வாய்ப்பு தற்போது ஸ்ரீலங்கா படையினருக்கு ஏற்பட்டிருப்பதாக கொழும்பிலுள்ள பாதுகாப்பு நிபுணர்கள் கூறுகின்றனர் என்றும் ''சந்தேசிய'' செய்தியில் கூறப்பட்டது

## வடகாகுதிக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இரண்டு ஆகியவை ஐந்தும் சேர்ந்து தலா நூறு தொன் படி ஐநூறு தொன் பொருள்களையே ஒரு சமயத்தில் ஏற்றிச் செல்லக்கூடியது.

ஆனால் தகர்க்கப்பட்ட ''எடித்தரா'' கப்பல் ஒரே சமயத்தில் ஆயிரத்துக்கும் அதிக தொன் பொருள்களை ஏற்றிச் சென்று விநியோகிக்கக்கூடியவை.

இந்தக் கப்பல் தகர்க்கப்பட்டதால் அவசரமாக ஒன்று அல்லது இரண்டு விநியோகக் கப்பல்களை அரசு கொள்வனவு செய்யவேண்டியிருக்கும் என்றும் —

அதுவரை, தற்போது செயல் இழந்திருக்கும் 'அபிதா' அல்லது 'விக்கிரம' கப்பலை திருத்தி உபயோகப் படுத்த வேண்டியிருக்கும் என்றும் —

இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

'முன்னேறிப் பாய்தல்' நடபடிக்கைக்குத் தேவையான— இரண்டாயிரத்து நானூறு தொன் பொருள்களை — 'எடித்தரா' கட்டளைக் கப்பலும் அதனோடு சேர்ந்த கலங்களும் குடாநாட்டுக்கு எடுத்துச் சென்று வழங்கியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடலில், மூழ்கிக் கொண்டிருக்கும் 'எடித்தரா' கப்பலில் இருந்து ஆயுதங்களையும் ஏனைய உபகரணங்களையும் கழற்றி எடுக்கும் முயற்சியில் கடற்படை ஈடுபட்டு இருக்கிறது.

இக் கப்பலை இனி திருத்தி எடுப்பது என்பது முடியாத காரியம் என பாதுகாப்பு படை வட்டாரங்கள் தெரிவித்தன.

கடற்படையினரின் அனைத்துக் கலங்களும் விடுதலைப் புலிகளின் கரும்புலித் தாக்குதலுக்கு இலக்காகும் ஆபத்து இருப்பதாக அதிகாரிகள் ஒப்புக் கொண்டனர்.

தனது மிகப்பெரிய கட்டளைக் கப்பலை கடற்படை இழந்ததும் —

விமான எதிர்ப்புத் திறனை விடுதலைப் புலிகள் மீண்டும் நிரூபித்திருப்பதும் —

விடுதலைப் புலிகளின் பிரதேசத்துக்குள் முன்னேற முயற்சிப்பதற்கு முன்னர், அது குறித்து இரண்டாவது தடவையும் சிந்திக்க வைக்கும் நிலைக்கு பாதுகாப்புப் படையினரைத் தள்ளியது.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. [உ]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே உள்ள அனைத்து பகுதிகளும் புலிகள் வசம்

## மேலும் 4 பெரிய ராணுவ முகாம்கள் மூடப்பட்டன

கொழும்பு, ஜூலை 20 மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள மேலும் நாலு பெரிய இராணுவ முகாம்களை கடந்த சனியன்று படையினர் மூடியதை அடுத்து— உன்னிச்சை மற்றும் ருகம் நீர்ப்பாசனத் திட்டங்கள் அடங்கியபகுதி உட்பட மட்டக்களப்பு வாவிக்கு மேற்கே உள்ள அனைத்துப் பிரதேசங்களும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுக்குள் வந்திருப்பதாக செய்தி ஏஜென்ஸிகள் அறிவித்திருக்கின்றன.

மட்டக்களப்பு— பதுளை வீதியில் இருந்த கரடியனாறு, இலுப்படிச்சேனை முகாம்களும்—

மட்டக்களப்பு விமான நிலையம் — ஆயித்தியமலை வீதியில் இருந்த ஆயித்தியமலை, அரசடிச்சேனை முகாம்களுமே கடந்த சனியன்று மூடப்பட்டன.

வாழைச்சேனை, கோரளைப்பற்று வடக்கு [வாகரை] பிரதேசங்களில் — ஆங்காங்கே தூரத் தூர அமைந்திருந்த பல முகாம்களைப் படையினர் ஏற்கனவே மூடிவிட்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

தற்போது கல்முனை, களுவாஞ்சிக்குடி, காத்தான்குடி, மட்டக்களப்பு, செங்கலடி, வாழைச்சேனை, பொலன்னறுவை பாதைகளில் மட்டுமே படை முகாம்கள் எஞ்சியிருப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி கனகம்மாள் முருகேசு

[மூளாய்]

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், மூளாயை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கனகம்மாள் [பாக்கியம்] முருகேசு 12-07-95 புதன்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற மலாயன் பென்சனியரும், மூளாய் கூட்டுறவு வைத்தியசாலை ஓய்வுபெற்ற அப்போதிக்கரியுமான திரு. தா. கிருஷ்ணர், சிவகாமி அம்மாள் தம்பதிகளின் ஏகபுதல்வியும், காலஞ்சென்ற ஓய்வுபெற்ற மூளாய் உப. தபாலதிபர், திரு. சு. முருகேசுவின் அருமை மனைவியும், பராசக்தி, ராதா (ஆசிரியை தொல்புரம் அ. மி. த. க. பாடசாலை) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் 16-07-95 ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை எம்மீது அன்பு கொண்ட அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தகவல்;
மகள்: ராதா

61, இந்துக்கல்லூரி வீதி,
வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம். [37618]

### மயில்வாகனம் பொன்னையா

(கும்பழாவளை - அளவெட்டி)

கும்பழாவளை அளவெட்டியில் வசித்து வந்த மயில்வாகனம் பொன்னையா அவர்கள் 14-07-95 வெள்ளிக்கிழமை மாகியப்பிட்டி, கண்ணகி அம்மன் கோவிலடியில் அகாலமரணமாகிவிட்டார்.

அன்னார் காலம்சென்ற திருமதி செல்லம்மா இராசையா (செல்லம்), அவர்களின் அன்பு சகோதரரும், காலம்சென்ற இராசையா சரவணமுத்து [மலேசியா], திருமதி ராஜேஸ்வரி மாணிக்கவாசகர் (ராணி), [கனடா], திருமதி நாகேஸ்வரி தர்மராஜசிங்கம் (தேவி), திருமதி செல்வேஸ்வரி சர்வானந்தன் (செல்வி), [கனடா], ஆகியோரின் பாசமிகு மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தவிர்க்கமுடியாத காரணங்களினால் இறந்த இடத்திலேயே புதன்கிழமை [19-07-95] தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
டொக்ரர். P. தர்மராஜசிங்கம்
திருமதி நாகேஸ்வரி தர்மராஜசிங்கம
கும்பழாவளை அளவெட்டி

தற்போதைய முகவரி,
இல: 60, மணிக்கூட்டு கோபுர வீதி
யாழ்ப்பாணம். [37623]

### பொன்னம்பலம் சிவானந்தன்

(பிரபல வர்த்தகர் கொழும்பு — மாலா இம்பெக்ஸ் உரிமையாளர்)

புங்குடுதீவு 2 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாக கொண்டவரும், தற்போது கொழும்பில் வசித்தவருமான பொன்னம்பலம் சிவானந்தன் நேற்று (19-7-95) கொழும்பில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் பார்வதிப்பிள்ளை தம்பதிகளின் மகனாரும், மாலதி தேவியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சோதிராஜா நாகம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், சுகன்யா, ராதிகா, பிரசிந்தா, ஜமினி, டிலக்சி, நித்தியன் ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், காலஞ்சென்றவர்களான சிவராசா, சிவபாலன், சிவபாதம், மற்றும் சரோஜினிதேவி, சிவலிங்கம் (ஜேர்மனி], சிவஜோதி [கனடா], சிவமலர், புனிதவதி [லண்டன்], சிவகலை, வர்ணம் (ஜேர்மனி] ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும், இத்தகவலை உற்றார், உறவினர் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்
நா. சுப்பிரமணியம்
[சித்தப்பா]

25/16, ஒடைலேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம். (37628)

## புலிகளின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இவை மிக இலகுவாக ரி-55 ரக ரஷ்யத் தயாரிப்பு பிரதான யுத்த டாங்கியையோ அல்லது துருப்புகளை ஏற்றிச் செல்லும் கவச வாகனங்களையோ தகர்த்துவிடக் கூடியவை என்றும் கூறப்படுகின்றது.

''முன்னேறிப் பாய்தல்'' நடவடிக்கையின் போது கடந்த வாரத்தில் ஆகக் குறைந்தது ஒரு கவசவாகனமும் ஒரு யுத்த டாங்கியும் சேதமுற்றன என்பது அறிய வந்தது.

''யாழ்தேவி'' நடவடிக்கை மற்றும் பூநகரி முகாம் மீதான புலிகளின் தாக்குதல் ஆகியவற்றின்போது நான்கு யுத்த டாங்கிகளை இராணுவம் இழந்தது. ஒரு யுத்த டாங்கியை புலிகள் கைப்பற்றினர்.

டாங்கிகள், கவச வாகனங்களுக்கு ஏற்பட்டுள்ள ஆபத்து நிலையை இராணுவம் உணர்ந்துள்ளது.

கிரனேட் ஏவும் றொக்கட் லோஞ்சர்களை ஆயுதமாகக் கொண்ட — டாங்கிகளை எதிர்த்து அழிக்கும்— டாங்கி எதிர்ப்பு அணி ஒன்றை விடுதலைப்புலிகள் உருவாக்கியிருப்பதாக இராணுவம் கூறுகின்றது.

'' டாங்கிகளையும், கவச வாகனங்களையும் இலக்கு வைப்பதற்காக அவர்கள் விசேட படையணி ஒன்றை உருவாக்கியிருக்கிறார்கள் போல் தெரிகின்றது ''— என்றார் ஓர் இராணுவ அதிகாரி.

'' விடுதலைப் புலிகளுக்கு எதிராக கவச வாகனங்களும் யுத்தடாங்கிகளும் எவ்வளவு சிறப்பாகச் செயற்படுகின்றன என்பதில் தான் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் எந்தப் படை நடவடிக்கையும் தங்கியுள்ளது ''— என்றும் அவர் குறிப்பிட்டார்.

''சரியாக கவச அணி இல்லாமல் விடுதலைப் புலிகளுக்கு எதிராக துருப்புகளுக்கு எந்த வாய்ப்பும் இல்லை''— என்றார் மற்றொரு அதிகாரி.

பாதுகாப்புப் படையினரின் வலுவை அதிகரிப்பதற்காக மேலும் பல கவச வாகனங்களையும், யுத்த டாங்கிகளையும் அரசு கொள்வனவு செய்யவிருக்கிறது.

— இவ்வாறு அந்தப்பத்திரி [illegible] தெரிவிக்கப்பட்டது. (உ)

# அதிபர்களின் சம்பளத்தை உயர்த்த நடவடிக்கை

கொழும்பு, ஜூலை 20 பாடசாலை அதிபர்களுக்கென தனியான சேவை ஒன்று நிறுவப்பட்டு, அவர்களின் சம்பள விகிதங்களும் மாற்றி அமைக்கப்பட உள்ளன.

கல்வி, உயர்கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரானாவின் உத்தரவின் பேரில் அமைச்சு உயர் அதிகாரிகள் இதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளதாக அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

அண்மையில் ஆசிரியர்களுக்கெனப் புறம்பாக ஆசிரிய சேவை ஒன்று உருவாக்கப்பட்டு சம்பளவிகிதங்கள் மாற்றப்பட்டன.

ஆதனால் ஆசிரியர்கள் தமது பாடசாலைகளின் அதிபர்களை விட கூடுதல் சம்பளம் பெறும் நிலை தோன்றியுள்ளது.

அதிபர்களின் தொழிற்சங்கங்கள் இதனைச் சுட்டிக்காட்டி, தமக்கும் தனியான சேவை ஒன்றை உருவாக்கி சம்பளத்தை மீள வகுக்கும்படி கேட்டிருந்தன.

இக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதிபர்கள் சேவையை உருவாக்கவும், புதிய சம்பள விகிதத்தை வகுக்கவும் கல்வி அமைச்சர் உத்தரவிட்டு அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாக அமைச்சின் மூத்த அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார். [அ]

## இறக்க முன்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் நடைபெறும் தினத்துக்கு முதல் நாள் இரவு 10 மணியளவில் கொழும்பில் உள்ள தனது தகப்பனாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்ட தில்ஹான் பெரேரா —

தற்போது மேற்கொள்ளப்படவிருக்கும் படை நடவடிக்கை இடைநிறுத்தப்படவிருப்பதாகவும், வார இறுதியில் கொழும்பு திரும்ப இருப்பதாகவும் தந்தையாரிடம் கூறியிருந்தாராம்.

''முழு அளவிலான படை நடவடிக்கைகளை மேற்கொள்ள போதியளவு தாக்குதல் விமானங்கள் இல்லை என்று எனது மகன் என்னிடம் கூறினான். இத்தகைய நிலையில், விமானப் படைக்கு புதியவர்களைச் சேர்ப்பதற்கு அரசு விளம்பரப்படுத்தும் போது' தற்கொலை விமானப் படை வீரர்கள்' பதவிக்கு விண்ணப்பங்களைக் கோரலாம் — என்று கோபத்துடன் குறிப்பிட்டார் தில்ஹானின் தந்தையார் டி. எவ். ஸி. ஓ. பெரேரா.

முதலாவது புக்காரா விமானம் குண்டு வீச்சை நடத்திவிட்டுச் சென்றதும், அடுத்த தாக்குதலுக்காக தனது புக்காராவை தில்ஹான் செலுத்திச் சென்றார். தமது முதல் முயற்சியில் அவரால் இலக்கை இனம் காணமுடியவில்லை. இதனை அடுத்து அடுத்த தடவை இரண்டாயிரத்து 220 அடிகள் உயரத்துக்கு அவர் குதித்து பதிந்த போது புலிகளின் ஏவுகணைத் தாக்குலுக்கு அவரது விமானம் இலக்கானது — என்றார் ஓர் அதிகாரி.

## மாவீரர்களுக்கு மக்கள் அஞ்சலி

யாழ்ப்பாணம், ஜூலை 20 ஸ்ரீலங்கா கடற்படையின் 'எடித்தரா' கட்டளைக் கப்பல் வெற்றித் தகர்ப்பில் வீரச்சாவடைந்த மாவீரர்களின் உருவப் படங்களும் வித்துடல்களும் தாங்கிய ஊர்தி மக்களின் அஞ்சலிக்காக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்படுகின்றன.

மக்கள் இந்த மாவீரர்களுக்கு மலர்தூவியும் ஒளிச்சுடர் ஏற்றியும் தமது அஞ்சலிகளைச் செலுத்துகின்றனர்.

தகர்த்து அழிக்கப்பட்ட 'எடித்தரா' கப்பலின் மாதிரி வடிவில் அமைக்கப்பட்ட ஊர்தியில் மாவீரர்களின் வித்துடல்களும் உருவப்படங்களும் கொண்டு செல்லப்படுகின்றன. (ஓ-4)

## சிப்பாய் பலி

திருகோணமலையில் இராணுவ ரோந்து அணி ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு இராணுவச் சிப்பாய் கொல்லப்பட்டார், இருவர் காயமடைந்தனர்.

கடந்த திங்களன்று மகாசொரூப என்ற இடத்தில் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. [ஓ-4]

## மரண அறிவித்தல்

### முருகேசு இராசதுரை

இணுவில் கிழக்கு அங்களப்பாயைச் சேர்ந்த காலஞ்சென்ற முருகேசு தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் இணுவில் மேற்கு இராமநாதர் பொன்னம்பலம் தம்பதிகளின் அன்பு மருமகனும் ஆகிய இராசதுரை நேற்றிரவு காலமானார்.

இவர் செல்லம்மாவின் அன்புக் கணவரும், வசந்தாதேவி [இணுவில்], வசந்தகுமாரி [இணுவில்], பரிமளநாதன் [சுவிஸ்], வசந்தநாதன் (சுவிஸ்), பவளகாந்தன் (சுவிஸ்), பிரபாகரன் (சுவிஸ்), ஸ்ரீநளினி (சுவிஸ்), வசந்தகுமார் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தந்தையும், குமாரசாமி, ஆறுமுகம், இராஜேஸ்வரி, மகேந்திரமணி, கலாவதி, சசிகலா, ரவிதரன் ஆகியோரின் அன்பு மாமனும்,—

கலைவாணி, கல்யாணி, கபேஸ்கர், பிரசாந், ஸ்ரீரஞ்சினி (சுவிஸ்], தர்மகுலசிங்கம் [சுவிஸ்], கலைச்செல்வி (சுவிஸ்) மயூரன் [சுவிஸ்], கௌதினி (சுவிஸ்], மதுஷன் [சுவிஸ்], கௌசிகன் [சுவிஸ்], தர்ஷன் (சுவிஸ்], விபுஷன் [சுவிஸ்], வினோஜன் (சுவிஸ்], கலைஅரசி [இத்தாலி], தயாபரன் [ஜேர்மன்], சசிகரன் [கனடா] ஆகியோரின் பேரனும், கீர்த்தனாவின் பூட்டனும், இரத்தினம், நடராஜா, கண்மணி, பரமேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று [20 7.95] பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு. ஆறுமுகம்
[மருமகன்]

விலாசம்:
இணுவில் கிழக்கு,
அங்களப்பாய்,
இணுவில். (37629)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20-07-1995 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org